தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, நவம்பர் 8, செவ்வாய்க்கிழமை

ஐப்பசி 23, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லன்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை"

அறத்தை அறிந்தவராய், அறிவு நிறைந்து அமைந்த சொல்லை உடையவராய், எக்காலத்திலும் செயல் செய்யும் திறன் அறிந்தவராய் உள்ளவர் ஆராய்ந்து கூறும் நல்ல துணையாக கருதப்படுவார்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண்.41, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

41—

கொடுமுடி பேரூராட்சியில் கிளைச் சிறைச்சாலை அமைத்தல்

26642—**திருமதி கவிநிலவு தர்மராஜ் :**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி பேரூராட்சியில் கிளைச் சிறைச்சாலை அமைய அரசு ஆவன செய்யுமா ?

[1994 நவம்பர் 8

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டத்தில் போதிய இடவசதியுடன் கூடிய கிளைச் சிறைகள் தேவையான எண்ணிக்கையில் இயங்கி வருகின்ற நிலையில் புதிதாக கொடுமுடி பேரூராட்சியில் கிளைச்சிறை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, ஈரோடு தாலுக்காவுக்கு உட்பட்டு இருக்கிற காரணத்தால் எதற்கெடுத்தாலும் ஈரோட்டில் இருக்கக்கூடிய வசதிகளை மொடக்குறிச்சி தொகுதிக்கு உதாரணமாகக் காட்டுகிற ஒரு சூழ்நிலை- நிலவிக் கொண்டிருக்கிறது. மொடக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்டு *4* காவல் நிலையங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 2 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அதோடு மட்டும் அல்லாமல் குவலையத்தின் குன்றாம் மணி விளக்காய் குபேரரும், இபேரரும் பாராட்டக்கூடிய குன்றின் மேல் விளக்காய் ஒளிவிட்டு வழி காட்டிக்கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான ஆட்சியிலே கொடுமுடியில் ஒரு தனித் தொகுதிக்கு 4 காவல் நிலையங்களைக் கொண்டு இருக்கிற நிலையை உணர்ந்து குற்றவியல் நீதிமன்றத்தை மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வசதிகள் இருக்கக்கூடிய மொடக்குறிச்சி தொகுதியினுடைய முக்கியமான பேரூராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிற கொடுமுடியிலே ஒரு கிளைச் சிறைச்சாலை இருக்குமானால் *45* கிலோமீட்டர் எந்த வேலையாக இருந்தாலும் * * என்னுடைய தொகுதியை விரைவில் ஒரு தாலுக்காவாக அறிவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஏகமனதாக நாங்கள் வைத்து இருக்கிற காரணத்தால் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** அது வேண்டாம், அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தாலுகாவுக்கு உட்பட்டு இருக்கிற காரணத்தால் எதற்கெடுத்தாலும் நாங்கள் அங்கு வரவேண்டி இருக்கிறதே என்ற ஒரு அங்கலாய்ப்பிலே நான் அதைக்கூறி இருக்கிறேன் என்பதையும் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எங்களுடைய நிலையை உணர்ந்து,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கொடுமுடியில் ஒரு கிளைச் சிறைச்சாலை வைப்பீர்களானால் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கரூர் பகுதியும் அங்கே இருக்கிறது. அதற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதையும் சொல்லி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து வருகிற நிதி ஆண்டிலாவது இப்படிப்பட்ட ஒரு நிலையை எங்களுக்கு உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எந்தக் குறிப்பும் இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எந்தக் குறிப்பும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இல்லை என்ற சொல்லை இல்லாமல் செய்யக்கூடிய ஒரு ஆற்றல் மிகுந்த, நினைத்ததை முடிக்கக்கூடிய ஆதிபராசக்தியினுடைய பொன்னான ஆட்சியிலே, வருகிற நிதி ஆண்டில் பொது மக்களுடைய நலன்களைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலையை அனுசரித்து, பொது நிலையை உணர்ந்து, எங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு கிளைச் சிறைச்சாலையை உருவாக்கித் தருகிற எண்ணம் இருக்கிறது என்பதை மக்கள் அறியக்கூடிய விதத்திலே எங்களுக்கு ஒரு உறுதி மட்டும் தந்தால் போதும். அந்த உறுதியையாவது வருகிற நிதி ஆண்டிலாவது தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு நிதிநிலை விவாதத்தின்போது இந்தக் கருத்தை வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

42—

அவினாசி தொகுதியில் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

***10460—டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதியில் பதிவாளர் அலுவலகம் (Registrar Office) அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?